## ஜனாதிபதியின் நிதியம் - 2016

ஜனாதிபதியின் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றும் ஏனைய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 7 ஆம் இலக்க ஜனாதிபதியின் நிதியச் சட்டத்தின் பிரிவு 9(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதியச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சருக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தினால் 9(4) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக மற்றும் நிதியத்திற்கு சொந்தமான நிதி முதலீடு செய்தல் தொடர்பான கூற்றும் இணைப்பு 01 எனவும் உட்படுத்தி, நிதியத்தில் விவகாரங்களை நிருவகித்தல் தொடர்பான அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. ஜனாதிபதியின் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான விரிவான அறிக்கையொன்று 2017 ஜூலை 31 திகதி ஜனாதிபதி செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாகத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை ஜனாதிபதியின் நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்


சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 183.81 மில்லியனுக்கான பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 159.12 மில்லியன் தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 342.93 மில்லியனுக்கான வீழ்ச்சி காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் வருமானம் ரூபா 72.88 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் மருத்துவ உதவிச் செலவு ரூபா 387.94 மில்லியனினாலும் மற்றும் புலமைப் பரிசில்கள் வழங்குதல் ரூபா 38.01 மில்லியனினாலும் அதிகரித்திருத்தல் மேற்கூறிய நிதி விளைவில் வீழ்ச்சிக்கு முக்கியமாக காரணமாக இருந்துள்ளது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினதும் கடந்த மூன்று வருடங்களினதும் நிதியத்தின் வருமான மிகை/(பற்றாக்குறை) மற்றும் தேறிய சொத்துக்களின் நிலைமை கீழே தரப்படுகின்றது.

| ஆண்டு | வருமான மிகை/ (பற்றாக்குறை) | தேறிய சொத்துக்களின் நிலைமை |
|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 2013 | 531 | 2,215 |
| 2014 | 475 | 2,674 |
| 2015 | 159 | 2,499 |
| 2016 | (184) | 2,296 |




சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 ஆண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகளின் மூலம் ரூபா 531 மில்லியனுக்காக தேறிய மிகையொன்றினைப் பெற்றிருந்ததுடன் அது 2016 வருட இறுதியில் ரூபா 184 மில்லியனுக்கான தேறிய பற்றாக்குறை ஒன்று வரை இடையறாது வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கு நேரொப்ப நிதியத்தின் தேறிய சொத்துக்களின் நிலைமையும் 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை தொடர்ச்சியாக அரிப்பு அடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் மொத்த வருமானத்தில் 87.6 சதவீதம் ஆகிய ரூபா 1,771.1 மில்லியன் தொகை அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து கிடைத்திருந்ததுடன் கடந்த ஆண்டின் போது அச் சபையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 1,727.06 மில்லியனுடன் இணக்கஞ் செய்யும் போது அது ரூபா 44.04 மில்லியனினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் மருத்துவ உதவி, பண்பாட்டு அலுவல்கள், மதவிவகாரங்கள், நலன்புரி அலுவல்கள், கல்வி விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கலை அலுவல்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள் வழங்குவதற்காக ரூபா 1,438.1 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அம் மொத்தச் செலவின் அமைப்பு மருத்துவ உதவிக்காக 89.6 சதவீதமும், பண்பாட்டு அலுவல்களுக்காக 0.27 சதவீதமும் மத விவகாரங்களுக்காக 0.35 சதவீதமும் நலன்புரி விவகாரங்களுக்காக 0.67 சதவீதமும், கல்விசார் விவகாரங்களுக்காக 0.17 சதவீதமும் விளையாட்டு மற்றும் கலை விவகாரங்களுக்காக 0.21 சதவீதமமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்காக 8.8 சதவீதமும் ஆக அமைந்திருந்தது.

(ஆ) மருத்துவ உதவி, கல்விசார் விவகாரங்கள், மத விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கலை விவகாரங்களுக்காக மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக முறையே 43 சதவீதத்தினால், 114 சதவீதத்தினால், 37 சதவீதத்தினால், 13 சதவீதத்தினால், 86 சதவீதத்தினால் மற்றும் 43 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் மருத்துவ உதவி வழங்குவதற்காக ரூபா 1,288,493,432 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் மக்கள் பிரதிநிதிகள் என தெரிவு செய்யப்பட்டிருக்கும் மற்றும் அவ்வாறு இருந்த 07 பேர்களுக்காக ரூபா 14,390,000 தொகையும் ஏனைய அனைத்து தரப்பினருக்கும் அதாவது பொது மக்களுக்கான 8388 மருத்துவ உதவித் தேவைகளுக்காக ரூபா 1,274,103,432 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பொது மக்களுக்கு மருத்துவ உதவித் தேவைகளுக்காக செலவிடப்பட்ட தொகை நிதியத்தின் மொத்த மருத்துவ உதவிச் செலவில் 98.9 சதவீதத்தினை பிரதி நிதித்துவப்படுத்தியது.

(ஈ) நிதியத்தின் கொள்கைகளின் பிரகாரம் திறந்த இருதய சத்திர சிகிச்சைக்காக ரூபா 200,000 தொகையும், திறந்ததல்லாத இருதய சத்திர சிகிச்சைக்காக ரூபா 150,000 தொகையும் செலுத்த இயலுமெனினும், அவ் விடயங்களுக்காக மக்கள் பிரதிநிதிகள் அல்லது அவ்வாறு இருந்த ஆட்களுக்கு போலவே அவ்வாறல்லாத பொது மக்களுக்கும் அவ்வரையறைகளை மீறி மருத்துவ உதவிகள் செலுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. கடந்த ஆண்டுகளைப் போலவே மீளாய்வாண்டிலும் பொது மகன் ஒருவருக்கு செலுத்தப்பட்ட மருத்துவ உதவிகள் சராசரி பெறுமதிக்கு ஒப்பாக மிகவும் கூடிய சராசரி பெறுமதியினை மக்கள் பிரதிநிதி ஒருவருக்கு அல்லது அவ்வாறு இருந்த நபர் ஒருவருக்காக மருத்துவ உதவி செலுத்தி இருந்தது என அவதானிக்கப்பட்டது.

(உ) மேற்கூறிய 3.2 இல் காட்டப்படும் சீரற்ற நிதி நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தும் போது, குறிப்பிட்ட வரையறைகளை மிகைத்து எந்த சாராருக்கு மருத்துவ உதவி வழங்குவது எனின் அங்கு கடைபிடிக்க வேண்டிய நியாயப்படுத்தக் கூடிய குறிப்பிட்ட தேர்வு முறைமை அறிமுகப்படுத்துவதன் மூலம் நிதியத்தின் செலவுகளை நல்ல நிலையில் முகாமைத்துவம் செய்தல் பொருத்தமானது என அவதானிக்கப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டின் போது 5897 இருதய சத்திர சிகிச்சைகளுக்காக ரூபா 891.9 மில்லியன் தொகையும், 635 புற்றுநோய் பரிகாரங்களுக்காக ரூபா 81.5 மில்லியன் தொகையும், 724 சிறுநீரகங்கள் பொருத்துவதற்காக ரூபா 116.6 மில்லியன் தொகையும், 1,139 ஏனைய பரிகாரங்களுக்காக ரூபா 198.5 மில்லியன் தொகையும் மருந்து உதவியாக செலவிடப்பட்டிருந்தது. கடந்த ஆண்டின் போது 6050 நோயாளிகளுக்காக ரூபா 900.6 மில்லியன் தொகையொன்று செலவிடுதலுடன் அதனை இணக்கஞ் செய்யும் இவ்வாண்டின் போது மருத்துவ உதவி பெற்றிருந்த நோயாளிகளின் எண்ணிக்கை 2345 இனால் அதாவது 39 சதவீதத்தினாலும், மருத்துவ உதவிச் செலவு ரூபா 387.9 மில்லியனாலும் அதிகரித்திருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது நிதியத்தினால் ரூபா 1,659.14 மில்லியனிற்கான தொகையொன்று முதலீடு செய்திருந்த போதிலும் ரூபா 1,622.35 மில்லியனிற்கான முதலீடுகள் திருப்பி பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிதியத்தில் காணப்பட்ட முதலீட்டு மீதியில் ரூபா 36.8 மில்லியன் இற்கான வளர்ச்சி ஒன்றினை காட்டியது. அதே போல் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதியத்தின் வட்டி வருமானமும் ரூபா 9.84 மில்லியனினால் வளர்ச்சியடைந்திருந்தது.

(ஏ) கண்டிப் பிரதேசத்தில் ரூபா 80 மில்லயின் செலவில் கட்டப்பட்டிருந்த புற்றுநோய் வைத்தியசாலைக்காக விஷேட செயற்திட்ட செலவு என ரூபா 20 மில்லியன் வீதம் 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் நிதியத்தினால் பணம் வழங்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் போது அச் செலவு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் விஷேட செயற்திட்டம் என செலவுகள் ஏதும் காணப்படவில்லை.

## 4.2 பதவியணியினர் நிருவாகம்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஜனாபதி செயலகத்தின் நிரந்தர சேவையில் கடமைபுரியும் உத்தியோகத்தர்களில் மேலதிக செயலாளர் ஒருவர், கணக்காளர் ஒருவர் உட்பட 37 உத்தியோகத்தர்கள் நிதியத்தின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் செலவு உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 10 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையாலும் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி என பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இணைப்பு 01

நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பாக மற்றும் நிதியத்தின் பணம் முதலீடு செய்தல் மீதான கூற்று

---

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | |
|---|---|---|
| | 2016 | 2015 |
| | ரூபா. | ரூபா. |
| **வருமானம்** | | |
| பங்களிப்புக்கள் பெறுவனவு | 63,010,454 | 44,006,333 |
| வட்டி வருமானம் | 187,773,079 | 177,936,245 |
| அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்து பெறுவனவு | 1,771,101,046 | 1,727,063,739 |
| | **2,021,884,579** | **1,949,006,317** |
| **செலவுகள்** | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 170,000 | 160,000 |
| மருத்துவ உதவி | 1,288,493,432 | 900,556,662 |
| பண்பாட்டு அலுவல்கள் | 3,800,000 | 2,750,000 |
| மத விவகாரங்கள் | 5,012,500 | 3,650,000 |
| நலன்புரி விவகாரங்கள் | 9,632,000 | 8,557,477 |
| கல்வி விவகாரங்கள் | 2,350,000 | 1,100,000 |
| புலமைப் பரிசில் திட்டம் | 125,867,470 | 87,853,050 |
| விஷேட செயற்திட்டம் (கண்டி புற்றுநோய் வைத்தியசாலை) | - | 20,000,000 |
| விளையாட்டு மற்றும் கலை விவகாரம் | 2,974,500 | 1,600,000 |
| மஹபொல உயர்கல்வி பொறுப்பு நிதியத்திற்கு 50% பங்களிப்பு | 767,393,833 | 735,754,720 |
| கிடைக்க வேண்டிய வட்டி பதிவழித்தல் | - | 27,900,000 |
| | 2,205,523,735 | 1,789,881,909 |
| வருமான மிகை/ (பற்றாக்குறை) | (183,809,157) | 159,124,408 |

(ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியத்திற்கு சொந்தமான பண முதலீடு செய்தல் தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| முதலீட்டு வகை | 2016 ஜனவரி 01 திகதி உள்ளவாறு மீதி | 2016 ஆண்டின் போது | | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | | முதலீடு செய்தல் | முதலீடுகளை விடுவித்தல் | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| தேசிய சேமிப்பு வங்கி – நிலையான வைப்புக்கள் | 1,622,567,500 | 1,470,074,000 | 1,622,347,500 | 1,470,294,000 |
| மக்கள் வங்கி – நிலையான வைப்புக்கள் | 112,780,000 | 8,012,341 | - | 120,792,341 |
| அபிவிருத்தி லொத்தர் சபையின் முதலீடுகள் | 2,200,000 | - | - | 2,200,000 |
| திறைசேரி முறி | 338,790,000 | - | - | 338,790,000 |
| மீள்கொள்வனவு உடன்படிக்கை | - | 181,050,000 | - | 181,050,000 |
| | 2,076,337,500 | 1,659,136,341 | 1,622,347,500 | 2,113,126,341 |